மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திருமதி செ. சுந்தராம்பாள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

2—

மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்குதல்.

* 10048 திருமதி செ. சுந்தராம்பாள்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேட்டூரிலுள்ள அலுமினியத் தொழிற்சாலையில் கடந்த 6 மாதங்களாக உற்பத்தி இல்லாமல் இயந்திரங்களை விற்று தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நிர்வாகமானது, இயந்திரங்களை விற்று தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுத்து வருவது தொடர்பான தகவல் எதுவும் இல்லை. கடந்த ஓராண்டாக இந்நிறுவனத்தில் உற்பத்தி ஏதும் நடைபெறாததால், நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதால்' தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்க தொழிற் சங்கங்களின் ஒப்புதலின் பேரில் மூலப் பொருட்களை மட்டும் விற்றதாக அறியப் படுகிறது.

(ஆ) மால்கோ நிர்வாகம் தொழிற்சாலையை மீண்டும் திறக்கச் சில சலுகைகளைக் கோரி தமிழக அரசிடம் விண்ணப் பித்திருந்தது. அக்கோரிக்கைகளை மனிதாபிமானம் மிக்க தொழிலாளர் நலம் காக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசினுடைய தொழிற்துறை பரிசீலனைசெய்து மின்சாரக் கட்டண பாக்கித் தொகையை தவணை முறையில் செலுத்துதல், மின் கட்டணச் சலுகை, விற்பனை வரி ஒத்தி வைத்தல் ஆகிய சலுகைகளை அரசு அளித்துள்ளது. மேற்கண்ட சலுகைகளை வைத்து, நிர்வாகம் நிதி நிறுவனங்களை அணுகி சலுகைகளைப் பெற்று மூன்று மாதத்திற்குள்ளாக தொழிற்சாலையைத் திறக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது. அரசு அறிவித்துள்ள சலுகைகளின் அடிப்படையில் நிர்வாகம் நிறுவனத்தை இயக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

திருமதி செ. சுந்தராம்பாள்; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் 3 மாதத்திற்குள் கம்பெனி திறக்கப்படும் என்று கூறியதற்காக தாயுள்ளம்

1992 செப்டம்பர் 21]

கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பில் நன்றியைக் கூறிக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஓராண்டுகாலமாக அந்த கம்பெனியின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காரணத்தினால் அந்தத் தொழிற்சாலையில் 1,500 குடும்பத்தினர் மிகவும கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 6 மாதமாக சம்பளம் எதுவும் கொடுக்கப்படாமல் உள்ள காரணத்தால் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். 1990–91 ஆம் ஆண்டுக்கான தீபாவளி போனஸ் கூட இன்னும் அவர்களுக்கு வழங்கப்படாமல் உள்ளது. எனவே தாயுள்ளம், கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கம்பெனி தனது உற்பத்தியை கூடிய விரைவில் தொடங்குவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று சொன்ன வள்ளலாரைப் போல இன்றைக்கு அருட்பெரும் ஜோதி தனிப் பெருங் கருணையாக ஒளி வெள்ளத்தோடு தனது ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற மனிதாபிமானம் மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) உரிய முயற்சிகளை மேற்கொண்டு கடந்த மார்ச் மாதம் வரைக்கான சம்பளத்தில் ஆயிரம் ரூபாய் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுக்கான போனஸ் தொகையைப் பெற்றுத் தருவதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்களின் அரசினுடைய தொழிலாளர் நலத்துறை உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்:

13—

நாமக்கல்லில் தவிட்டு எண்ணெய்த் தொழிற்சாலை.

* 9554—திரு. எஸ். அன்பழகன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நாமக்கல்லில் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?